## முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 10-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிச்சந்திரன் | வயது | : | 50 |
| தந்தை/கணவர் பெயர் | : | வீராசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 08.12.2021-ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது அண்ணாமலை நகர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக உள்ளேன். சம்பவ காலத்தில் புதுச்சத்திரம் காவல்நிலையத்தில் இருக்கும்போது அயல்பணியாக மோப்பநாய் பிரிவில் பணியாற்றி வந்தேன். 03.05.2016 ஆம் தேதி சுமார் 12.30 மணியளவில் கடலூர் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வந்த தகவலின்படி மோப்பநாய் ஜாக் அழைத்து சென்று சிதம்பரம் அண்ணாமலை நகர் காவல்நிலையம் சென்று பின்னர் மாரியப்பா நகர் தெற்கு குறுக்கு தெரு, 311 நம்பர் வீட்டில் வெடிகுண்டு வெடித்திருந்தது அந்த இடத்தில் சோதனை இட்டோம். அந்த வீட்டின் பெட்ரூம், சமையல் அறை, அதை சுற்றி மோப்ப நாய் சம்பவ இடத்திலேயே வந்து நின்று விட்டது. இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 11 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அண்ணாமலை | வயது | : | 54 |
| தந்தை/கணவர் பெயர் | : | மகாலிங்கம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

சட்டம் 44/1969-ன் விதிமுறைகளின் படி 08.12.2021-ம் நாளாகிய இன்று சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது நடுவீரப்பட்டு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 03.05.2014 ஆம் தேதி பரங்கிபேட்டை காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின்பேரில் கடலூர் வெடிகுண்டு கண்டுபிடிப்பு மற்றும் அழித்தல் பிரிவில் அயல்பணியில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 03.05.2014 ஆம் தேதி அண்ணாமலை நகர் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட மாரியப்பா நகரில் 2 வது குறுக்கு தெருவில் 14.00 மணிக்கு சென்று கதவு எண். 311 ல் சம்பவம் நடந்த இடத்திற் கு சென்று பார்த்தபோது அந்த வீட்டின் கிழக்கு அறையில் நாட்டு வெடிகுண்டு வெடித்து இருந்தது. வெடிக்காத நாட்டு வெடி குண்டு இருந்தது. அதை ஆய்வாளர் உத்தரவு படி எடுத்து சென்றுஅதன் அருகில்உள்ள காலி மைதானத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு பின்னர் அன்றைய தினமே ஆய்வாளர் அவர்கள் சிதம்பரம் நீதித்துறை நடுவர் அவர்களின் உத்தரவு பெற்று மேற்படி வெடிகுண்டு செயலிழக்க கேட்டு கொண்டதின்பேரில் எங்கள் குழு அனைவரும் சேர்ந்து அதை வெடிக்க வைத்து செயலிழக்க செய்தோம். அதன்பின் சிதறிய பொருட்கள் எவர்சில்வர் தகடுகள் சிறிய துண்டுகள் 3, அதில் உருகியநிலையில் சிகப்பு கலர் இன்சுலேஷன் டேப் துண்டுகள், பால்ரஸ் துண்டுகள் 10 இவைகளை சேகரித்து

ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. எவர்சில்வர் தகடுகள் சிறிய துண்டுகள் 3 அதில் சிவப்பு கலர் இன்சுலேஷன் டேப்புகள் உருகிய நிலையில் ஒட்டப்பட்டதுடன் சாபொ.1 வரிசை ஆகும். பால்ரஸ் துண்டுகள் 10 சாபொ.2 வரிசை ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்படி எடுத்தது சம்மந்தமாக நான் ஆய்வாளருக்கு கொடுத்த தனிஅறிக்கை அசாஆ. 11 ஆகும்.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை